## புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 மார்கழி 17ந் திகதி முதல் 23ந் திகதி வரை

***“தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்” (பிலிப் 2:7)***

01. புகழ்ச்சிக்கான அறிமுகம்

- புபுது பாடல் இல 11 “ஆவியின் வருகையும் ஆவியின் வல்லமையும்….. இப் பாடலை பாடியவாறு புகழ்ச்சிக்கு உள்ளாகவும்.
- நாம் நெருங்கியிருப்பது அதி பிரசித்திப் பெற்ற காலகட்டமாகிய திருவருகைக் காலத்தின் இறுதி வாரத்திற்கேயாகும். இறை மகனானவர் பரிசுத்த திருத்துவத்தின் இரண்டாமவரான இயேசுக்கிறிஸ்து ஆண்டவர் எம்மைத் தேடிவருகின்றார் என திருச்சபைத் தாயானவள் எமக்கு அறிவிக்கிறாள். இறை வல்லமை, இறை மாட்சிமை, இறை மகிமை (இறை தன்மை அல்ல) அனைத்திலும் வெறுமையாகியவாறு எம்மை நோக்கிவரும் அவரை வரவேற்றிட நாம் எவ்வளவு தூரம் விழிப்புற்றிருக்கிறோம். நத்தார் அதாவது ‘புதுப் பிறப்பு’ உரிமையாக்கிக் கொள்வதற்கு உங்களுக்கும் எனக்கும் மாத்திரமல்ல முழு உலகிற்குமே உரிமையாக்கிக் கொடுப்பதற்கே. உங்களையும் என்னையும் அழைத்துள்ளது. ஆந்த மகா அழைப்பினோடு இறை ஆண்டவர் முன்னிலையில் தோன்றி நிற்போம்.
- புபுது பாடல் இல 182 “உள்ளத்திற்கு உள்ளம்…..” இப் பாடலோடு எம்முடன் உயிருள்ளவராக வீற்றிருக்கும் இயேசு ஆண்டவரோடு இணைந்து மகோன்னத இறைவனைப் புகழ்வோம்.

02. கடந்த வார நற்செய்தியை முன்கொண்டு அனுபவத்தை பகிரவும்.

03. நாளுக்குரிய நற்செய்தி

- பிலிப்பியர் 2:5-8
- சிறு குழுக்களாக பிரிந்து இப் பகுதியை வாசித்து அது குறித்து சங்கமமாக்கிக் கொள்ளவும்.
- பின்னர் சிறுகுழுக்கள் சிலவற்றின் அனுபவத்தை பொதுவில் சங்கமமாக்கவும்.

04. வெளிப்பாடுகளை உரிமையாக்கிக் கொள்வோம்.

- நத்தார் என்பதன் அர்த்தம் ‘புதுப் பிறப்பு’ கிறிஸ்து ஆண்டவரின் பிறந்த நாளாகும். ஆதலால் நத்தார் உங்களுக்கும் எனக்கும் எம் அனைவருக்கும் புதுப் பிறப்பினை அண்மித்துத் தரவேண்டும். அப்படியில்லா விடில் நாம் ஆண்டவரின் இன்றும் ஒரு நத்தாரை கொண்டாடினோம் மாத்திரமே என்பதனை விலக்கிவிட முடியாது.
- இயேசு ஆண்டவர் இவ் வுலகிற்கு வரும் போதே எமக்குக் கற்பிக்கும் பாடம் என்ன?
- பிலிப்பியர் 2:6,7 இதனூடாக எமக்கு வெளிப்பாடாக்குவது அவருக்கு உரிமையாகி இருந்த இறை மாட்சி, இறை மகிமை, இறை வல்லமையினின்று வெறுமையாகி அடிமை நிலை ஏற்று எம்மைப் போன்ற மனிதனானார் மனிதனோடு சங்கமமானார். என்பதுவே.
- பிலிப்பியர் 2:8 மனிதனாக இருந்தவாறு சிலுவை மரணம் வரை கீழ்ப்படிந்தார்.
- அவர் ஏழைகளின் ஏழையாகிய வாறு மாட்டுத் தொழுவத்தில் பிறக்கின்ற இந்த நத்தார் எமக்கு வெளிப்படுத்தும் மிகப் பெரிய வெளிப்பாடு இதுவல்லவா?

05. எமது பேரில் (உங்களது சிறுசங்கத்தில் பகிர்ந்து கொள்ளவும்.

- ஆண்டவர் எங்களுக்குத் தரும் இந்த வெளிப்பாட்டினை உங்களது எனது வாழ்க்கையில் இணைத்துக் கொள்வது எவ்வாறு? நான் என் சங்கத்தோடு ஒன்றுபடுவதற்கு நான் கைவிட வேண்டியது எவற்றை?

- உண்மையான புதுப் பிறப்பினை அனுபவிப்பதற்கு ஆண்டவர் அப்பா தந்தைக்கு கீழ்படிந்தது போல எமது வாழ்விலும் இறைவனுக்கு கீழ்படிய வேண்டிய வவாழ்வின் பல்வேறு பகுதிகள் என்ன?

06. இறுதிப் புகழ்ச்சி

- பிலிப்பியர் 2:5 ‘‘கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்’’
- ‘‘என் பின்னே வா’’எனும் அழைப்பு அவரைப் போல் ஆவதற்கே. எந்த ஒரு மனிதனுக்கும், எதற்கும், கட்சிகளுக்கும், நிறங்களுக்கும் அடிமையாகாமல் சுதந்திரமாக அனைத்திலும் ஆண்டவரின் எண்ணப்படி வாழ்க்கையை வாழ்ந்தவாறு இறைவிருப்பத்திற்கு ஆமென் கூறுவதற்கு வேண்டிய வரத்தைக் கேட்டவாறு முழு மனதுடன் ‘‘என் பின்னே வா’’எனும் வார்த்தைக்கு பதில் அளிப்பதற்கு தேவையான வரத்தினை வேண்டி நாம் ஒருவர் ஒருவருக்காக மன்றாடுவோம்.
- புபுது பாடல் இல 222 ‘நீர் ஒருவரே…….’